கோரிக்கைகள் 1-ம் 3-ம் ஏற்கனவே பரிசீலனையில் உள்ளன என்றும் எஞ்சியுள்ள மூன்று கோரிக்கைகள் ஆய்வுசெய்யப்படுமென்றும் நிறுவனத்தாரால் அறிவிக்கப்பட்டதும், தொழிலாளர்கள் கலைந்து சென்றனர்.

திரு. சி. கோவிந்தராஜன் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனத்தின்கீழ் சுமார் 25 என்ஜினியரிங் யூனிட்டுகள் இருக்கின்றன. இதில் வேலை செய்பவர்களுக்கு சென்ட்ரல் வேஜ் போர்டு சட்டம் அமலாக்காமல் இருக்கிறது. அவர்கள் அன்றைக்கு ஆர்ப்பாட்டம் செய்ததாகத் தெரிகிறதே, அது சம்பந்தமாக அரசின் நிலை என்ன ?

மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, அரசின் நிலை என்னவென்றால், தொழிலாளர்கள் வேஜ் போர்டின் சிபாரிசின்படி ஊதியம் பெற வேண்டுமென்பதுதான். தொழில்துறை மூலமாக தொழிலாளர்களும் நிறுவனமும் பேச்சுவார்த்தை நடத்தி சில செட்டில்மென்டுகளை அமைத்துக் கொள்ள வேண்டுமென்று வேண்டுகோள் விடுத்திருக்கிறோம். ஒருசில நிறுவனங்களில் பேச்சுவார்த்தை முடிந்தும் இருக்கிறது. பேச்சுவார்த்தை நடக்காத நிறுவனங்கள் இருக்குமானால், தொழிற்சங்கத் தலைவர்களும், நிறுவனமும் கூடிப்பேசி தீர்த்துக்கொள்ளலாம். ஏதாவது கஷ்டங்கள் இருந்து என் கவனத்திற்குக் கொண்டுவரப்படுமானால், நானும் என்னுடைய துறையின் மூலமாக தக்க நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வழி செய்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

காவல்துறையினருக்கு ரயிலில் பிரயாணம் செய்ய இலவசப் பயணச் சீட்டுகள்

*259 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

காவல்துறையினருக்கு அவர்கள் வெளியூர்களுக்குச் சென்று வர இலவச ரயில் பாஸ் வழங்கும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அத்தகைய திட்டம் எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. என். கிட்டப்பா : பேரவைத் தலைவர் அவர்களே, ராணுவத்தினருக்குக் கொடுக்கப்படுகின்ற சலுகைகள் காவல் துறையினருக்கும் அளிக்கப்படுவது நியாயம் என்பதை நமது அரசு மத்திய அரசுக்கு எடுத்துக்காட்டி, அதைப் பெறுவதற்கு முயற்சிகள் எடுத்துக்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, ஏற்கெனவே நடைபெற்ற ஒரு ஆலோசனைக் கூட்டத்தில் இதுபற்றி எடுத்துச்சொல்லப்பட்டு, ஆனால், மத்திய அரசு அந்தச் சலுகைகளை ஏற்றுக்கொள்ள இயலாது என்று தெரிவித்திருக்கிறது.

Permission to rear cattle in police lines.

*260 *Q*.—Thiru T. MARTIN : Will the Hon. the Chief Minister be pleased to state whether there is any proposal pending now before the Government to permit policemen to rear cows and buffaloes near their houses in the Police lines in Madras?